**<u>இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்</u>**

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 167/2025

**ம.சா. 1**

**திரு. சின்ன பழனியப்பன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சமயத்தில் நான் எந்த வாகனம் ஓட்டிசென்றேன் என்றால் பைக் ஓட்டிசென்றேன். விபத்து சமயத்தில் நான் தலைகசவம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இல்லை என்றால் இருந்தது ஆனால் காலாவதியாகிவிட்டது. விபத்தானது கோபி-சத்தி கிழமேல் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். காசிபாளையம் பெட்ரோல் பங்கிற்கு சற்று கிழபுறமாக நடந்தது என்றால் சரிதான். நான் மேற்படி பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுவிட்டு ரோட்டின் குறுக்காக கிழக்கு நோக்கி வந்தேன் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் 2 ரோடுகளை பிரிக்கும் டிவைடர் உள்ளது என்றால் சரிதான். சத்தி-கோபி ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் பெட்ரோல் பங்கிலிருந்து வடக்காக சென்று U Turn அடித்து பின்னிட்டு கிழபுறமாக திரும்பவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு செல்லாமல் பெட்ரோல் பங்கிலிருந்து நேராக சத்தி-கோபி ரோட்டிற்கு வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது

என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும், வேன் டிரைவரின் கவனக்குறைவால் ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் மேற்படி சமயத்தில் பங்கிலிருந்து தெற்கு பக்கமிருந்து வடக்காக ரோட்டை கடந்தேன் என்றால் சரிதான். இந்த மனுவானது காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வயது 75 என்றால் சரிதான். நான் வயதானவர் என்பதால் வீட்டில் ஓய்வில் தான் உள்ளேன் என்றால் சரிதான். நான் தச்சு வேலை செய்து மாதம் ரூ.25 ஆயிரம் சம்பாதித்து வருகிறேன் என்று மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு சாதாரண காயங்கள் ஏற்பட்டதாக மருத்துவ குறிப்பில் உள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்டஈட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.